[21st December 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : மெடிக்கல் காலேஜ் அட்மிஷனுக்கு கடந்த வருடம் 296 ஸீட்டுக்கு 1,352 அப்ளிகேஷன் வந்தது. இந்த வருடம் 300 ஸீட்டுக்கு 1,465 அப்ளிகேஷன் வந்தது. இப்படியாக அநேக அப்ளிகேஷன் வந்துகொண்டிருக்கிறது. இதைக் குறைக்க வேண்டியிருக்கிறது. அதல்லாமல் பெர்ஸனுலிடி எல்லாம் திடீர் என்று வரக்கூடியது அல்ல. மீசை வேண்டுமானுல் திடீரென்று வளர்த்து விடலாம். உடலை அப்படி வளர்க்க முடியாது. (சிரிப்பு.)

SRI V. R. NAGARAJAN : இரண்டு தடவை மனுப்போட்டும் கிடைக்காத அபேட்சகர்கள் மூன்ருவது தடவை மனுப்போட்டல் அவர்கள் பின்னுல் நல்ல பயிற்சியுள்ள டாக்டர்களாக வரலாம். அப்படி அவர்கள் மூன்ருவது தடவையாக மனுச் செய்துகொண்டால் அவர்களை அவசியம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பிக்கக் கூடாதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படியானுல் கனம் அங்கத்தினருக்கும் எனக்கும் ஒரு சமுத்திர அளவு வித்தியாசம் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : கனம் மந்திரி சொல்லுகிற பதிலிலிருந்து ஒன்று நன்கு தெரிகிறது. மனுக்கள் அதிகமாக வருகிறது என்று. ஆதலால் இரண்டாவது தடவை மனுப் போட்டவர்கள் ஏன் மூன்ருவது தடவை மனுப் போடக்கூடாது ? அப்படிச் சொல்வது சரியல்ல. அதனுல் அதிகப்படியான கல்லூரிகளை வைத்திருந்தால் அவைகளில் மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு வசதியாக இருக்கும் அல்லவா ? அப்படி அதிகப்படியான கல்லூரிகளை அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றியும் அரசாங்கம் கவனித்து அதில் கவனம் செலுத்தி வருகிறது. இன்னும் அதிகப்படியான கல்லூரிகளை அமைப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிருர்கள்.

SRI M. PALANIYANDI : அதிகப்படியாக மனுக்கள் வருகின்றன என்று தோன்றுகிறது. ஏனென்ருல் மூன்ருவது தடவையாகக்கூட மனுக்கள் வருவதாகத் தெரிகிறது. அதனுல் ஆயிரக்கணக்கான மனுக்கள் வருவதாகத் தெரிகிறது. பர்ஸனுலிடி இல்லாத காரணத்தாலோ அல்லது மார்க்குகள் இல்லாத காரணத்தாலோ அநேகம் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான மனுக்கள் வருவதால் மூன்ருவது தடவையும் மனுச் செய்து கொண்டால் ஏன் அவர்களை எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே சமயத்தில் அவர்கள் திடமுள்ளவர்களாக இருக்கலாம். தற்போது கனம் மந்திரி அவர்கள் அரை மீசையிலிருந்து முறுக்கு மீசைக்கு வருவதுபோல் மாணவர்களும் திட முள்ளவர்களாக வருவதற்கு இடம் இருக்கிறது. அதனுல் அவர்கள் மூன்ருவது தடவை மனுச் செய்துகொண்டாலும் ஏன் அவர்களை எடுத்துக்கொள்ளக் கூடாது ?

Hotel workers

*394 *Q.*—SRI S. RAMALINGAM (on behalf of Sri A. K. Subbiah) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether a deputation of the Madras City Hotel Workers' Union waited on the Minister on 29th of September 1956 and presented a memorandum; and

(*b*) if so, the action taken on the memorandum?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) In the memorandum it has been urged that the proposed legislation for hotel workers should be expedited. Since the ques-

21st December 1956]

tion of enacting a legislation for the purpose is already engaging the attention of the Government, no separate action has been considered necesary on the memorandum.

Sri V. R. NAGARAJAN : ஹோட்டல் தொழில் ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் பெரிய ஹோட்டல்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் தேசீயமயமாக்கும் எண்ணம் நமது சர்க்காருக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஹோட்டல் தொழிலாளர்களுடைய குறைகளைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதன் விவரங்களை இங்கே சட்டசபையில் சமர்ப்பிக்கலாம். பெரிய ஹோட்டல்களை தேசீயமயமாக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்தினிடம் இல்லை.

Sri M. KALYANASUNDARAM : ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமான ஒரு மசோதா தயாரிக்கும்படியாக பிரச்னை சர்க்காருடைய ஆலோசனையில் இருந்தது. அது எவ்வளவு வருஷ காலமாக இருந்து வருகிறது. இன்னும் எத்தனை வருஷ காலத்தில் அதைப்பற்றி முடிவு எடுப்பார்கள்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் முன்பின் எத்தனை வருஷங்கள் என்று சொல்ல முடியாது. இரண்டொரு மாதங்களாகத்தான் இருந்துவருகிறது. கொஞ்ச நாட்களாகத்தான் அது பரிசீலனையில் இருந்துவருகிறது. சில மாதங்களில் அது சட்டமாகலாம்.

Sri S. RAMALINGAM : ஹோட்டல் சம்பந்தமாக ஹைகோர்ட் ஆர்டர் வந்ததால் அதாவது பெரிய ஹோட்டல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை பாக்டரி சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியாது என்று தீர்ப்பளித்ததால் அந்தச் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் எல்லாம் அவர்களுக்கு கிடைக்காமல் போய்விட்டன. அவர்களுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய சலுகைகள்கூட அதாவது லீவு சலுகை முதலிய சாதாரண சலுகைகள்கூட கிடைக்காமல் போய்விட்டன. பல ஹோட்டல் முதலாளிகள் அங்குள்ள தொழிலாளர்களை சுரண்டுவதற்கு ஈடுபட்டு விட்டார்கள். மற்றும் அவர்களை வேலையை விட்டும் நீக்குவதற்கு முற்பட்டு விட்டார்கள். இன்னும் பல விதமான தொந்தரவுகளையும் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் சட்டம் எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவர வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டும். அதற்காகவே சர்க்காரையும் சீக்கிரத்தில் சட்டத்தைக்கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சட்டத்தை சட்டசபையின் முன்பாக எப்பொழுது கொண்டுவருவதற்கு சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அது விஷயத்தில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை என்பதை கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

Sri V. BALAKRISHNAN : கடை மசோதாவின் விதிகள் ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் அனுசரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுவும் இப்பொழுது யோசிக்கப்பட்டுதான் இருக்கிறது.

Cyclone relief loan applications

* 395 *Q*.—**Sri V. BALAKRISHNAN** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Ramanathapuram district has been given one month extension of time from 31st July 1956 for the disposal of the pending Cyclone Relief loan applications;